1. ‘ஞ்’ என் புள்ளி ஈற்றுச் சொல் வேற்றுமை உருபு ஏற்கையில் பெறுகின்ற சாரியை

(A) அன் (B) இன் (C) வற்று (D) அத்து

2. பதிற்றுப் பத்தில் அந்தாதித் தொடையில் அமைந்த பத்து

(A) எட்டாம் பத்து (B) ஆறாம் பத்து
(C) நான்காம் பத்து (D) இரண்டாம் பத்து

3. கடியலூர் உருத்திரங் கண்ணனார் படைத்த நூலுக்குச் சோழ மன்னன் பரிசளித்தமையைக் குறிப்பிடுவது

(A) கலிங்கத்துப் பரணி (B) தக்கயாகப் பரணி
(C) முல்லைப் பாட்டு (D) மதுரைக் காஞ்சி

4. திருக்குறளைத் ‘திருவள்ளுவப் பயன்’ என்று குறிப்பிடுபவர்

(A) இளம்பூரணர் (B) பேராசிரியர்
(C) நச்சினார்க்கினியர் (D) கல்லாடர்

5. மடக்கணியை ஆண்ட முதல் காப்பியம்

(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை
(C) சிந்தாமணி (D) வளையாபதி

6. பத்தினி பத்தர்கள் என்று பத்தினி வழிபாட்டைக் கூறுவது

(A) தேவாரம் (B) திருவாசகம்
(C) திருமந்திரம் (D) பெரிய புராணம்

LIVEWORKSHEETS